பக்கங்கள் 18 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 24 சனிக்கிழமை 07.02.2026 | அதிர்வு 190

## மின்சாரம் தாக்கியதில் தாயும் மகளும் மரணம்!

### கண்டியில் பெரும் சோகம்



மின்சாரம் தாக்கியதில் தாயும் மகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள் ளனர். இந்தத் துயரச் சம்பவம்

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# எதிரணிகளின் ஆட்சிக் கனவு நனவாகாது!



## நாமல், ரணில், சஜித் தரப்புகளை எள்ளிநகையாடும் என்.பி.பி. அரசு

ஆட்சிப்பீடம் ஏறுவோம் என்று எதிரணிகள் கனவு காணக்கூடாது என்று ஆளும் தரப்பு தெரிவித்துள்ளது.

சஜித் அணிக்கோ அல்லது ரணில் அணிக்கோ அல்லது ராஜபக்ஷ அணிக்கோ ஆட்சியமைக்கும் கனவு இருந்தால் இப்போதே அந்தக் கனவைக் கலைத்து விட வேண்டும் என்றும் ஆளும் தரப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

04

# ஏமாற்று அரசியலுக்கு இனிமேல் இடமில்லை!

### அநுர அரசை சாடும் சஜித் அணி



பொய் வாக்குறுதிகளை வழங்கி நாட்டு மக்களைத் தொடர்ந்து ஏமாற்றலாம் என்று அநுர அரசு இனிமேலும் எண்ணக் கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக எச்சரித்துள்ளது.

மக்கள் இன்று அரசின் உண்மை முகத்தை முழுமையாகப் புரிந்துகொண்டுள்ளனர் என்றும், ஏமாற்று அரசியலுக்கு இனி இடமில்லை என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

03

# நாமலின் இனவாதம் இனியும் எடுபடாது!

## மக்களைப் பற்றிக் கதைப்பதற்கு அவருக்கு அருகதை இல்லை என்றும் லக்மாலி விளாசல்



ஆளுங்கட்சி எம்.பி. லக்மாலி ஹேமச்சந்திரா நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மீது கடும் விமர்சனக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.


நாடாளுமன்றத்தில் பேசும் போது, லக்மாலி எம்.பி. மேலும் கூறியதாவது:-

"நாமல் ராஜபக்ஷ இனத்திற்காகவும் மதத்திற்காகவும் முன்னிலை வகிக்கும் அரசியல்வாதி எனத் தன்னைச் சித்தரிக்க முயல்கின்றார்.ஆனால், தெற்கில் வாக்குக் கேட்டு சிங்கள மக்களின் ஆதரவுடன் நாடாளு மன்றம் வருவதற்கு தற்செயல் துணி வில்லாதவர் இன்று வீரவசனம் பேசி அழைக்கின்றார்.

மக்களைப் பற்றிக் கதைப்பதற்கு அவருக்கு எந்த அருகதையும் இல்லை. நாட்டை நாசமாக்கிய கூட்டமே இப்போது இனவாத அரசியலை முன்னெடுக்க முயல்கின்றது." – என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:–

"சிங்களரும் பௌத்தரும் நேர்மையான மக்கள். ஆனால், சிங்களரும் பௌத்தரும் எனத் தன்னைச் சித்தரிக்கும் சில அரசியல்வாதிகள் ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். இனவாதத்துக்கு இனி இடமில்லை. நாமலின் இனவாத அரசியல் இனியும் எடுபடாது." – என்றார்.



# வயலில் வேலை செய்த குடும்பப் பெண் காட்டு யானை தாக்கி பரிதாப மரணம்!

காட்டு யானையின் தாக்குதலால் குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை மாவட்டத்தின் மெதிரிகிரியை பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

வயலில் கூலி வேலை செய்து கொண்டிருந்த போது காட்டு யானை தாக்கியதில் மேற்படி பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று பிள்ளைகளின் தாயாரான 45 வயதுடைய பெண்ணே காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தமிழருக்குத் தீர்வு கிடைக்க பிரிட்டன் உதவிட வேண்டும்!

## பிரிட்டன் தூதுவரிடம் மனோ கோரிக்கை



"சர்வதேச சமூகம் மற்றும் இலங்கையின் அபிவிருத்திப் பங்காளிகள் ஆகிய அணிகளுக்குப் பிரித்தானியா தலைமைப் பாத்திரம் வகித்து, தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகள் நிறைவேற உதவிட வேண்டும்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்றூ பற்றிக்குடன் நடைபெற்ற சந்திப் பின்போதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளதாவது:-

### மலையகத் தமிழர்

குறிப்பாக, இன்றைய, அரசு முன்னெடுக்கும், 50 இலட்சம் ரூபா டித்வா மீள் கட்டுமான வீடமைப்பு மற்றும் காணி வழங்கல் ஆகிய அரச நிவாரணத் திட்டங்களில் பாதிக்க பட்டுள்ள மலையக மக்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் டித்வா வீடமைப்பு நிவாரணங்கள் நமது மக்களுக்கு இல்லை.

நாம் என்ன இந்தியப் பிரஜைகளா? இது இரண்டாம் தர இலங்கைக் குடியுரிமை இல்லையா? இது தென்னாபிரிக்காவில் காணப்பட்ட "அபார்தைட்" என்ற இன ஒதுக்கல் ஆகும் என்பதைப் பொறுப்புடன் கூறி வைக்க விரும்புகின்றேன்.

மேலும், இன்று மலைநாட்டில், காணியுரிமையை மறுத்து, தொடர்மாடி கட்ட இந்த அரசு இரகசிய திட்டம் தீட்டுகின்றது. காணி உரிமை மறுக்கப்படும் எந்த ஓர் அரச திட்டத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இவற்றுக்கு எதிராக நாம் மக்களை அணிதிரட்டிப் போராடுவோம்.

ஆகவே, மலையகத் தமிழருக்கு நியாயம் பெற்றுத் தருவதில், அவர்களின் குடியுரிமை முழு குடியுரிமையாக வழங்கப் படுவதில சர்வதேச சமூகம் மற்றும் இலங்கையின் அபிவிருத்திப் பங்காளிகள் ஆகிய அணிகளுக்கு பிரித்தானியா தலைமைப் பாத்திரம் வகிக்க வேண்டும் என நான் கோருகின்றேன்.

### ஈழத்தமிழர்


ஜனாதிபதி அடிக்கடி வடக்குக்குப் போய் வருகின்றார். அங்கே பொங்கல் கொண்டாடுகின்றார். இளைஞர்களுடன் "செல்பி" எடுக்கின்றார். காலையில் நடை பயிற்சி செய்கின்றார். மக்களுடன் உரையாடுகின்றார்.

ஆனால் அங்கே தான் செய்து தருவ தாக வாக்களித்த அனைத்தையும் கால வரையின்றி இன்று அவர் ஒத்திவைத்து விட்டார்.

உறுதியளித்த மாகாண சபைத் தேர்தல் இல்லை. மாகாண சபை நிர்வாகம் ஆளுநர்கள் மூலம் நடத்தப்படுகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்றார்கள். இன்று நீக்கம் இல்லையாம். இன்னொரு புதிய சட்டம் கொண்டு வர முயல்கின்றார்கள். காணி விடுவிப்பு நின்று போய் விட்டது. அரசியல் கைதிகளை விடுவிப்போம் என்றார்கள். இன்று எஞ்சியுள்ள 12 நீண்டகால அரசியல் கைதிகளை விடுவிக்க மறுக்கின் றார்கள். புதிய அரசமைப்பு பேச்சுகளை இதோ, அதோ, ஆரம்பிப்போம் என் றார்கள். அனைத்தும் அலங்கார வார்த் தைகளுடன் தொக்கி நிற்கின்றன.

ஆகவே, சர்வதேச சமூகம் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி பங்காளிகள் ஆகிய அணிகளுக்குப் பிரித்தானியா தலைமைப் பாத்திரம் வகித்து, தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்புகள் நிறைவேற உதவிட வேண்டும் என நான் கோருகின்றேன். – என்றுள்ளது.




## ஏமாற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சிக்கு வருவதற்கு முன் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படவில்லை என்றும், மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு இந்த அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் தேர்தல்கள் மக்களின் தீர்ப்பை வெளிப்படுத்தும் முக்கியமான சந்தர்ப்பமாக அமையும் என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.அந்தத் தேர்தல்களில் மக்கள் இந்த அரசுக்கு தக்க பாடம் புகட்டுவார்கள் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டுள்ளார்.

## மின்சாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி, கலஹா – நவனெலிய பகுதியில் இன்று காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 46 வயதுடைய தாயும், 13 வயதுடைய மகளும் உயிரிழந்துள்ளனர்.

இருவரும் கறிவேப்பிலை பறித்துக்கொண்டிருந்தபோது தரையில் விழுந்து கிடந்த மின்சாரக் கம்பியில் சிக்குண்டமையால் மின்சாரம் தாக்கியுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கலஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எதிரணிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி மென்மேலும் வலுப்பெற்று வருகின்றது. இந்த ஆட்சியை எந்தத் தரப்பாலும் அசைக்க முடியாது. பல தசாப்தங்களுக்கு தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி தொடர நாட்டு மக்கள் அடித்தளம் வைத்துள்ளனர்.

ராஜபக்ஷக்களின் குழந்தை நாமல் ராஜபக்ஷ இனவாதத்தைக் கக்கி எம்மை ஒன்றும் செய்ய முடியாது. அவர் சிறுபிள்ளைத்தனம் கொண்டவர் என்று நாட்டு மக்களுக்குத் தெரியும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் படுதோல்வியடைந்தமையை மறக்கக் கூடாது.

சஜித் பிரேமதாஸ் கடந்த இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக வர முயன்றார். ஆனால் அவரால் வெற்றி பெற முடியவில்லை.

திருடர்களைப் பாதுகாத்த ரணில் விக்கிரமசிங்கவும் குறுக்கு வழியில் மீண்டும் ஜனாதிபதியாக வரலாம் என்று கனவு காண்கின்றார். அந்தக் கனவு இனி நனவாகாது." – என்றார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாறாத அதே போக்கு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அரசியல் கொள்கைக் குத்துக்கரணங்களுக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பது மாத்திரமல்ல, பயங்கரவாதத் தடுப்புச் சட்ட நீக்க விடயத்தில் அது பின்பற்றும் அந்தர் பல்டிப் போக்கும் நல்ல உதாரணமாகும்.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஒரு நிகழ்வில் இந்த அரசாங்கத்தின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தி இருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

இந்த விவகாரத்தில் இந்த அரசாங்கம் செய்வது தவறு என்பது நீதித்துறையில் பல வருடகால அனுபவமுடைய அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் மனச்சாட்சிக்குத் தெரியும் என இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டியுள்ளார். அது உண்மைதான்.

"பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவோம் என்பது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளில் மிகமுக்கியமானதாகும். 2023 ஆம் ஆண்டளவில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முற்பட்ட வேளையில், அதற்கு எதிராகவும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தியும் நாம் நாடளாவிய ரீதியில் பாரிய கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்தோம். அவ்வேளையில் கொழும்பில் நடத்திய போராட்டத்துக்கு வசந்த சமரசிங்க வருகை தந்து கையெழுத்திட்டார். களுத்துறையில் நளிந்த ஜயதிஸ்ஸ கையெழுத்திட்டார். கேகாலையில் தம்மிக பட்டபெண்டி கையெழுத்திட்டார். மாத்தறையில் சுனில் ஹந்துனெத்தி கையெழுத்திட்டார். அவ்வாறு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிப்பதற்கு ஆதரவாகக் கையெழுத்திட்ட நபர்கள் அங்கம் வகிக்கும் தற்போதைய அமைச்சரவையின் ஊடாக அதனை விட மிக மோசமான புதியதொரு சட்ட வரைவு கொண்டுவரப்படுவது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயமாகும்."- என்று சாணக்கியன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிரணியில் இருந்த போது நீதி, நியாயம், கொள்கை பற்றி பேசிய தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் பாரம்பரியமான அரசுக் கட்டமைப்பை - குறிப்பாக பாதுகாப்பு தரப்பினரின் நியாயமற்ற அழுத்தங்களை - மீறி நீதி செய்யக்கூடிய தற்றுணிவும், அரசியல் செல்வாக்கும், அதிகார நேர்மையும் இல்லாமல் போய்விட்டது.

அரச பயங்கரவாதத்தின் ஊற்றுக் கண்ணாக விளங்குவதே பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்தான். அதன் மூலம் அரசுகள் மேற்கொண்ட அரச பயங்கரவாதத்தை தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியினரே நேரடியாக அனுபவித்திருக்கிறார்கள். ஆனாலும், அரச பயங்கரவாதத்தின் ரிஷிமூலமாக அமையும் அந்தச் சட்டத்தை இல்லாதொழிக்கும் அரசியல் பற்றுறுதி - நீதி செய்யும் முதுகெலும்பு - தேசிய மக்கள் சக்திக்கு இல்லை என்பது இந்த விடயத்தில் அம்பலமாகி விட்டது. அதுவும் கூட - தேசிய மக்கள் சக்தியும் கூட - இதுவரை ஆட்சியில் இருந்த பேரினவாத அரசுகளின் வழி தோன்றல் என்பதால் அந்த பாதையில் இருந்து அதனால் மாறி நீதி நீதிப்பாதையில் முன்னேற முடியவில்லை என்பதுதான் உண்மை.

### மட்டு. குடும்பிமலைப் பகுதியில்

# புதைத்து வைக்கப்பட்டிருந்த 3 ரொக்கெட் லோஞ்சர்கள் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டம், குடும்பிமலைப் பகுதியில் பாதுகாப்பாக நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சுவீடன் நாட்டில் தயாரிக்கப்பட்ட மூன்று ரொக்கெட் லோஞ்சர் ரக ஆயுதங்களை நேற்று வெள்ளிக்கிழமை மாலை விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளனர் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலனறுவை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சம்பவ தினமான நேற்று மாலை அரங்கலாவ விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இணைந்து குடும்பிமலைப் பகுதியில் நிலத்தைத் தோண்டி, புதைத்து வைக்கப்பட்டிருந்த சுவீடன் நாட்டில் தயாரிக்கப்பட்ட மூன்று ரொக்கெட் லோஞ்சர் ரக ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட இந்த ஆயுதங்கள் வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்



# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

### முதியவர் ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் காலி, கரந்தெனிய பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள், முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திய 24 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

நாகொடை பிரதேசத்தைச் சேர்ந்த இந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றைய மோட்டார் சைக்கிளின் செலுத்துநரான 67 வயதுடைய முதியவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# நுஜா அமைப்பின் சுதந்திர தின நிகழ்வில் சமூகச் செயற்பாட்டாளர்கள் கௌரவிப்பு

## அங்கத்தவர்களுக்கு நியமனக் கடிதமும் வழங்கி வைப்பு

**(பைசல் இஸ்மாயில்)**

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வைக் கொண்டாடும் வகையில் தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் அங்கத்தவர்களுக்கான அடையாள அட்டை மற்றும் நியமனக் கடிதம் வழங்கி வைக்கும் நிகழ்வும், சமூகச் செயற்பாட்டாளர்கள் கௌரவிப்பும் அட்டாளைச்சேனை சறா பீச் மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்குத் தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும் அக்கரைப்பற்று மாநகர முதல்வருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் தேசியக் கொடியையும் ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வின் விஷேட அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எம்.சபீஸ், வைத்தியர் திருமதி சித்ரா தேவராஜன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் ஓய்வு பெற்ற செயலாளர் மூ.கோபாலரத்திணம், அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் பைறூஸ், அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.எல்.பாயிஸ், ஏ.சி.நியாஸ், ஏ.சி.எம்.சி. கட்சியின் அக்கரைப்பற்று இளைஞர் அமைப்பாளர் மபாஸ், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் சப் இன்ஸ்பெக்டர் தௌபீக், ஜனநாயக ஆசிரியர் சங்கத் தலைவர் ஏ.பீ.கமால்தீன், தேசிய காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயலாளர் எஸ்.ஐ.பாயிஸ், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட், நுஜா அமைப்பின் நிபுணத்துவ ஆலோசகர்களான ஏ.ஜீ.எம்.ஜக்கீபர், ஏ.எல்.கிதுறு முகம்மட் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தவிசாளர் யூ.எஸ்.எம்.ஹபீஸா, பிரதித் தலைவர் ஏ.எல்.றமீஸ் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வின்போது, பொதுச் சேவையில் தங்களை முழுமையாக அர்ப்பணிப்புச் செய்தவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி, பதக்கம்

தொடர்ச்சி▼





















# நுஜா அமைப்பின் சுதந்திர தின நிகழ்வில் சமூகச் செயற்பாட்டாளர்கள் கௌரவிப்பு

தொடர்ச்சி▲

அணிவிக்கப்பட்டுப் பாராட்டிக் கௌர விக்கப்பட்டனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலக தையல் போதனாசிரியையும் பிரபல சமூக சேவையாளருமான யூஎஸ்.எம். ஜனுல் மர்ழியா, கவிஞரும் பாடசாலை ஆசிரியையுமான அன்சார் பீவீ, அக் கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் அப்ரோஸ் றூஹி, ஊடகவியலாளர் விநாயகமூர்த்தி கலைச்செல்வி, அம்பாறை மாவட்ட சனசமூக நிலை யங்களின் தலைவியும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தருமான யூ.எல். சிப்லியா, அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் பைறூஸ், தோல் நலன் பேணும் நலங்குமா தயாரிப்பாளர் பாத்திமா பர்ஹானா ஆகியோரே பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், தேசிய ஐக்கிய ஊடகவி யலாளர் ஒன்றியத்திலுள்ள 50 உறுப் பினர்களுக்கான அடையாள அட்டை மற்றும் நியமனக் கடிதங்களை பிரதம அதிதி மற்றும் அதிதிகள் வழங்கி வைத்தனர். அத்தோடு, சிறுவர்களின் கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்ற மையும் குறிப்பிடத்தக்கது.

நாட்டின் சுதந்திரத்துக்காகப் பங் காற்றிய தலைவர்கள் நினைவுகூரப் பட்டதுடன், சுதந்திர தினத்தின் முக்கி யத்துவம் பற்றியும் அதிதிகள் உரை யாற்றியமை விசேட அம்சமாகும்.




















# டித்வா பேரிடர் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க அவசரகால சட்டம் அவசியமில்லை

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவிப்பு

“பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குநிவாரணமளிக்கஅவசரகாலசட்டம் அவசியமில்லை. ஆனால் இப்போது டித்வா காரணமாகவே அவசரகால சட்டம் தேவைப்படுகின்றது என்று கூறி எங்களை ஏமாற்ற முடியாது.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமைநடைபெற்றபொதுமக்கள்பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அவசரகால சட்டம் தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானத்தை நாங்கள் எதிர்ப்பதுடன், இது தொடர்பில் வாக்கெடுப்பை கோருவோம். இதன்போது இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வாக்களிப்போம். நாங்கள் இதனை ஏன் எதிர்க்க வேண்டும் என்பதற்கு தமிழர்களின் வரலாற்றை எடுத்துப்பார்த்தால் புதிதாக பதிவு செய்யத் தேவைப்படாது.

இப்போது கூட தையிட்டியில் நாங்கள் போராடும் போது பொலிஸார் வழமைப் போன்று நடவடிக்கை எடுக்கின்றனர். அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தியுள்ள காலத்தில் இதனை காட்டி நடவடிக்கை எடுக்கின்றனர். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை கொடூரமான சட்டம் இதனை நீக்கப் போகின்றோம் என்று கூறிக் கொண்டு இப்போது கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வடக்கு மற்றும் கிழக்கில் அரசியல் ரீதியில் அரசாங்கத்தை எதிர்க்கும் போது இதனை பயன்படுத்துகின்றனர். இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம்.

டித்வா புயல் சேதங்கள் தொடர்பான திட்டங்கள் சீர்குலைக்கப்படக்கூடாது என்பதற்காகவே அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் இதற்கு முன்னரும் இது போன்ற அனர்த்தங்கள் நடந்துள்ளன. வடக்கு மற்றும் கிழக்கும் பாதிக்கப்பட்டுள்ளன.

பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதுவும் செய்யவில்லை. இதற்கு அவசரகால சட்டம் அவசியமில்லை. ஆனால் இப்போது டித்வா காரணமாகவே அவசரகால சட்டம் தேவைப்படுகின்றது என்று கூறி எங்களை பேய் காட்ட முடியாது. நிச்சயமாக அரசியல் செயற்பாடுகளுக்கு மக்களிடையே வளரும் எதிர்ப்பை மறுப்பதற்கும் அதனை அடக்குவதற்கும் உங்களுக்கு தேவைப்படும் அதிகாரமாகவே பார்க்கப்படுகின்றது.

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகள் எமது மீனவர்களின் சொத்துக்களை அழிப்பது தொடர்பில் ஒவ்வொரு மாதமும் கூறியுள்ளனர். அடிக்கடி இந்த நாடாளுமன்றத்தில் இந்த விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரையில் இந்த அரசாங்கம் எவ்விதமான ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2025 ஆம் ஆண்டில் 15 ரோலர்களும், இந்த வருடத்தில் 6 ரோலர்களை மட்டுமே பிடித்துள்ளீர்கள். ஆனால் ஆயிரக்கணக்கான படகுகள் வந்து எமது மீனவர்களின் சொத்துக்களை அழிக்கின்றன.

கடந்தகால ஆட்சியாளர்களும் இவ்வாறே செயற்பட்டனர். 2013ஆம் ஆண்டில் இருந்து 500 இந்திய ரோலர் படகுகள் பிடிக்கப்பட்டுள்ளதுடன், 319 படகுகள் எவ்வித நிபந்தனைகளும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளன. 30 வழக்குகள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2871 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 2779 பேர் எவ்வித நடவடிக்கையும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இப்படியொரு நிலைமை இருக்கையில் அரசாங்கமும் ஏன் இப்படி நடந்து கொள்கிறது. இராஜதந்திரம், இந்தியாவை பகைக்கக்கூடாது என்று கூறுகின்றீர்கள். இதுபோன்று தெற்கில் நடந்தால் பார்த்துக்கொண்டு இருப்பீர்களா? வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாக தமிழர்கள் இருப்பதாலேயே இவ்வாறு நடந்துகொள்கின்றீர்கள். படகுகளை பிடிக்க முடியாவிட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடுகளை வழங்க முடியதா?

இதேவேளை, திருகோணமலையில் கடந்த முதலாம் திகதி கோகன்ன ரஜ மகா விகாரையின் காலமான விகாராதிபதியின் உடல் ஹேய்சர் விளையாட்டு மைதானத்தில் எரிக்கப்பட்டது. அந்த மைதானத்தை தமிழ் சிறுவர்களே அதிகமாக பயன்படுத்துகின்றனர். தமிழ் மக்களின் கலாச்சாரத்திற்கமைய எரிக்கப்பட்ட இடங்களில் மக்கள் கால் வைப்பதில்லை. ஆனால் தேரர் ஒருவர் அவ்விடத்தில் எரிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு அவர்களால் விளையாட முடியாது.

இதேவேளை, விடுதலைப் புலி போராளிகள் உடல்கள் புதைக்கப்பட்ட இடங்கள் இராணுவத்தினர் வசமுள்ளன. அவற்றின் மீது நடக்கின்றனர். அந்த இடங்களை மக்களிடம் மீள கையளிக்க வேண்டும். மக்களின் உணர்வுகள் மற்றும் உணர்வுபூர்வமான விடயங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.”

– என்றார்.

# கடந்த அரசுகளை விடவும் இந்தியாவை தீவிரமாக காதலிக்கும் அநுர அரசாங்கம்

## சாமர சம்பத் எம்.பி. தெரிவிப்பு

“கடந்த கால அரசாங்கங்களை காட்டிலும் இந்தியாவை தீவிரமாக காதலிக்கும் அரசாங்கமாக அநுரகுமார அரசாங்கமே உள்ளது. இந்தியாவின் விருப்பு, வெறுப்புக்கு அமையவே அரசாங்கம் செயற்படுகிறது. இவர்களுக்கு வெட்கமில்லையா?”

– இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சாமர சம்பத் மேலும் உரையாற்றுகையில்,

“இந்தியாவுக்கு எதிராக இந்திய எதிர்ப்பு மாதத்தை அனுஸ்டித்தவர்களுக்கு இன்று இந்தியா இல்லாமல் எதுவுமே இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டை ஆட்சி செய்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச சந்திரிகா, மஹிந்த, கோட்டா, மைத்திரி, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை விட அநுரகுமார அரசாங்கமே இந்தியாவை தற்போது தீவிரமாக காதலிக்கிறது.

ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தற்போது இந்தியாவில் குதூகலம் அனுபவிக்கின்றார். ஜனாதிபதியும் இந்தியா செல்லவுள்ளார். இன்று இவர்களுக்கு எல்லாமே



இந்தியாதான். உங்களுக்கு வெட்கமில்லையா? உங்களால் கொல்லப்பட்டவர்கள், உங்களுக்காக உயிர்கொடுத்தவர்கள் உங்களின் இந்திய ‘லவ்’ வை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் பதில் சொல்ல வேண்டிவரும்.”– என்றார்.

# இராணுவத்தின் கௌரவத்தை பாதுகாக்கவே நாங்கள் அரசியலில் முன்னிலையானோம்

## பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவிப்பு

“இராணுவத்தினரின் கௌரவம் பற்றி பேசும் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரர் எவ்வித தகுதியுமில்லாமல் கடற்படைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டார். அவரது தந்தையின் ஆட்சியில் இராணுவத்தினர் எவ்வாறு பயன்படுத்தப்பட்டார்கள் என்பதை முழு நாடும் நன்கு அறியும். இராணுவத்தின் கௌரவத்தை பாதுகாப்பதற்காகவே நாங்கள் அரசியலில் முன்னிலையானோம்.”

– இவ்வாறு பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“டித்வா புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட நாட்டை மீட்டெடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணமளிப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே பொதுபாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் அவசரகால சட்டம் ஜனாதிபதியால் அமுல்படுத்தப்பட்டு, செல்லுபடி காலம் இரண்டாவது முறையாகவும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இலங்கையை மீட்டெடுப்பதற்காக பிரதமர் தலைமையில் 25 பேரை உள்ளிடக்கிய வகையில் செயலணி ஒன்று நியமிக்கப்பட்டு, 08 உப குழுக்கள் நியமிக்கப்பட்டு. உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நெருக்கடியான நிலையில் பாதிக்கப்பட்ட போது 32 நாடுகள் இலங்கைக்கு பல்வேறு வழிமுறைகளில் ஒத்துழைப்பு வழங்



கின.

அனர்த்த நிலைமையின் போது அரச அதிகாரிகள், முப்படையினர் மற்றும் பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள். இன்றும் அவ்வாறே செயற்படுகிறார்கள். முப்படையினரின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த நெருக்கடியில் இருந்து ஒருபோதும் மீள முடியாது.

சுதந்திர தினத்தன்று இராணுவத்தினர் கௌரவிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். இவர்களது ஆட்சியில் இராணுவத்தினர் எவ்வாறு மதிக்கப்பட்டார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இளவரசர்கள் ‘ரேஸ்’ ஓடுவதற்கு மண் நிரப்புவதற்காகவே கடந்த காலங்களில் இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டார்கள்.

இராணுவத்தினரின் கௌரவம் பற்றி பேசும் உறுப்பினரின் சகோதரர் எவ்வித தகுதியுமில்லாமல் கடற்படைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டார். அவரது தந்தையின் ஆட்சியில் இராணுவத்தினர் எவ்வாறு பயன்படுத்தப்பட்டார்கள் என்பதை முழு நாடும் நன்கு அறியும். இராணுவத்தின் கௌரவத்தை பாதுகாப்பதற்காகவே நாங்கள் அரசியலில் முன்னிலையானோம். இராணுவத்தினரோ அல்லது பொலிஸாரோ தற்போது அரசியலுக்காக பயன்படுத்தப்படவில்லை.”– என்றார்.

# மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்நாட்டு வழிமுறையில் நடவடிக்கை

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

நாட்டில் கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்நாட்டு வழிமுறைகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்று வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்ற அமர்வின் போது, இலங்கையின் இராணுவ பிரதானிகள் உள்ளிட்ட நால்வருக்கு பிரித்தானியா விதித்துள்ள தடை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மார்ச் 2025 இல் ஐக்கிய இராச்சியத்தின் தீர்மானம் வெளியிடப்பட்டபோது, அமைச்சரவை அதில் மிகுந்த கவனம் செலுத்தியது. மேலும் இது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடும் வெளிப்படுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் சார்பாக, ஐக்கிய இராச்சியத்தின் இத்தகைய தீர்மானங்கள் நமது நாட்டில் மேற்கொள்ளப்படும் நல்லிணக்கத் திட்டங்களைப் பாதிக்கும் என்று நாங்கள் கூறியிருந்தோம். கூடுதலாக, கடந்த காலங்களில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்நாட்டு வழிமுறைகள் மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க அடிப்படையிலான திட்டங்களை நமது அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.

இதற்கு முன்னர், அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகள் இராணுவ அதிகாரிகள் உட்பட பல்வேறு தரப்பினர் மீதும் தடைகளை விதித்துள்ளன. அந்த வகையில், ஐக்கிய இராச்சியத்தின் இந்த நடவடிக்கை புதியதல்ல.

இருப்பினும், இவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தடைகள் சர்வதேச சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு



கவுன்சிலுக்கு முரணானவை. இலங்கை அரசாங்கம் தன்னிச்சையாக எடுக்கப்பட்ட இத்தகைய நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளாது. அதன்படி, அரசாங்கம் அதை நிராகரித்தாலும், எங்கள் தெளிவான சர்வதேச கொள்கையின்படி சர்வதேச சட்டத்தின்படி நாங்கள் செயல்படுவோம்.

காலனித்துவ காலத்தில் இடம்பெற்ற சொத்து சேதங்கள், திருட்டுகள் மற்றும் உயிர் இழப்புகளுக்கு இலங்கை இங்கிலாந்திடம் இழப்பீடு கேட்க திட்டமிட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தில், கலாச்சார அமைச்சராக பதவி வகித்த போது சொத்து சேதங்கள், திருட்டுகள் மற்றும் உயிர் இழப்புகளுக்கு இழப்பீடு வழங்கவும், காலனித்துவ காலத்தில் போர்த்துகீசியர்களால் எடுத்துச் செல்லப்பட்ட இலங்கையின் மதிப்புமிக்க சொத்துக்களை திருப்பித் தரவும் பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரியிருந்தோம்.”– என்றார்.

# பொலிஸ் நிலையத்தில் கத்திக்குத்து தாக்குதல்

(பொகவந்தலாவ நிருபர்)

பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வந்த பொலிஸ் உத்தியோகஸ்த்தர் மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தரை கத்தியால் குத்திய சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றதாக பொலிஸ் ஊடகப்




பிரிவு தெரிவித்துள்ளது.

பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வரும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்துள்ளது.

கத்திக் குத்து தாக்குதலில் காயங்களுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிழங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலும் நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் ஹட்டன் பொலிஸ் வலயத்திற்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன, கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



# ஹர்ஷன நாணயக்காரவின் மனச்சாட்சிக்கு அரசாங்கம் செய்வது தவறு என்று தெரியும்

## இரா.சாணக்கியன் தெரிவிப்பு



இந்த அரசாங்கம் செய்வது தவறு என்று நீதித்துறையில் பல வருடகால அனுபவமுடைய அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் மனச்சாட்சிக்குத் தெரியும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும் எனவும், புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவை வாபஸ் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தி மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் இணைந்து நாடளாவிய ரீதியில் பல்வேறு கலந்துரையாடல்கள், விழிப்புணர்வூட்டல் கூட்டங்கள், எதிர்ப்புப்போராட்டங்களை நடாத்திவருகின்றனர்.

அந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஓரங்கமாக சில சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து கொழும்பிலுள்ள நீதியமைச்சுக்கு முன்பாக கடந்த வாரம் வெள்ளிக்கிழமை தொடர் கவனயீர்ப்புப் போராட்டப் பிரசாரமொன்றை ஆரம்பித்திருந்தன. அத்தொடர் போராட்டம் நீர்கொழும்பு பிரஜைகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை நீதியமைச்சுக்கு முன்பாக நடைபெற்றது.

இப்போராட்டத்தில் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சாணக்கியன், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்த அதேவேளை, மறுபுறம் நீதியமைச்சின் முன்றலில் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தோர் 'பயங்கரவாதத்தடைச்சட்டம் எமக்கு வேண்டாம்', 'பயங்கரவாதச்சட்டங்கள் அரசைப் பாதுகாக்கின்றனவே தவிர மக்களைப் பாதுகாக்கவில்லை', 'பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு, பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவை வாபஸ் பெறு', 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவின் ஊடாக பொதுமக்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன', 'மக்களின் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரத்தை முடக்குவதற்கு பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தைக் கொண்டுவரவேண்டாம்' எனும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பிரயோகித்து நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களைப் பிரதிபலிக்கும் வகையிலான கோஷங்களையும் எழுப்பினர்.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கருத்து தெரிவிக்கையில்,

"பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவோம் என்பது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளில் மிகமுக்கியமானதாகும். 2023 ஆம் ஆண்டளவில் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முற்பட்ட வேளையில், அதற்கு எதிராகவும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தியும் நாம் நாடளாவிய ரீதியில் பாரிய கையெழுத்துப்போராட்டத்தை முன்னெடுத்தோம்.

அவ்வேளையில் கொழும்பில் நடாத்திய போராட்டத்துக்கு வசந்த சமரசிங்க வருகைதந்து கையெழுத்திட்டார். களுத்துறையில் நளிந்த ஜயதிஸ்ஸ கையெழுத்திட்டார். கேகாலையில் தம்மிக பட்டபெண்டி கையெழுத்திட்டார். மாத்தறையில் சுனில் ஹந்துனெத்தி கையெழுத்திட்டார். அவ்வாறு பயங்கரவாதத்தடைச்சட்டத்தை ஒழிப்பதற்கு ஆதரவாகக் கையெழுத்திட்டநபர்கள் அங்கம் வகிக்கும் தற்போதைய அமைச்சரவையின் ஊடாக அதனைவிட மிகமோசமான புதியதொரு சட்ட வரைவு கொண்டுவரப்படுவது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத விடயமாகும்.

இப்புதிய சட்ட வரைவு குறித்து நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஏனெனில் கடந்த காலங்களில் இவ்விடயத்தில் எமது நிலைப்பாடும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் நிலைப்பாடும் ஒத்தவையாகவே காணப்பட்டன. பயங்கரவாதம் உள்ளிட்ட சகல குற்றங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதற்கு அவசியமான சரத்துக்கள் குற்றவியல் தண்டனைச்சட்டக்கோவையின் கீழ் உள்ளன. ஆகவே பயங்கரவாதத்தடைச்சட்டம் பதிலீடின்றி முற்றாக நீக்கப்படவேண்டும் என்பதே அந்த நிலைப்பாடாகும்.

இன்று இப்போராட்டத்தில் எம்மை ஒளிப்பதிவு செய்யும் மற்றும் புகைப்படம் எடுக்கும் பலர் ஊடகவியலாளர்கள் அல்ல. மாறாக அவர்கள் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இது தேசிய மக்கள்சக்திஅரசாங்கம்வெட்கப்படவேண்டியதொரு ஒடுக்குமுறை நடவடிக்கையாகும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்கள், அவ்வரசாங்கத்திடமிருந்து இதனை எதிர்பார்க்கவில்லை.

இந்த அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே, அதனை விடவும் மோசமான புதியதொரு சட்ட வரைவை முன்மொழிந்து மக்களை ஏமாற்ற முயல்கின்றது.

இந்த விடயத்தில், அரசாங்கத்துக்குள் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார எதனையும் செய்யமுடியாத கையாலாகாத நிலையிலேயே இருக்கின்றார். பிரதமர் ஹரினி அமரசூரியவும் அவ்வாறானதொரு நிலையிலேயே இருக்கின்றார். இந்த அரசாங்கம் செய்வது தவறு என்று அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் மனசாட்சிக்குத் தெரியும். பல வருடகாலம் நீதித்துறையில் அனுபவம் வாய்ந்த அவருக்கு இது தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் மக்கள் ஆலோசனைகளைப் பெறும் காலப்பகுதி எதிர்வரும் 28 ஆம் திகதி நிறைவடைந்தாலும், இச்சட்டவரைவை வாபஸ் பெற்று, பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக நீக்கும் வரை நாம் இந்தப் போராட்டங்களை நிறுத்தக் கூடாது."– என்றார்.

# ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் விசேட போக்குவரத்து திட்டம் அமுல்



கொழும்பு, கறுவாத்தோட்டம், ஆனந்த குமாரசுவாமிமாவத்தையைமையப்படுத்தி விசேட போக்குவரத்து திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக காவல் துறை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சிறப்பு போக்குவரத்து திட்டம் நாளை மறுநாள் அதிகாலை 4.00 மணி வரை நடைமுறையில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் நடைபெறவுள்ள 'கலா பொல 2026' கலைக் கண்காட்சி காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஆனந்த குமாரசாமி மாவத்தையில் உள்ள நூலக சுற்று வட்டத்திலிருந்து ஹோர்டன் சுற்றுவட்டம் வரை போக்குவரத்து ஒரு வழிப்பாதையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.






# சுற்றுலா அபிவிருத்தி மூலோபாயத் திட்டம் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிப்பு

வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் தயாரிக்கப்பட்ட ‘2026 – 2030 வடக்கு சுற்றுலா அபிவிருத்தி மூலோபாயத் திட்டம்’ நேற்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகனிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, திட்ட அறிக்கை ஆளுநரிடம் கையளிக்கப்பட்டதோடு, அந்த திட்டம் தொடர்பான விரிவான முன்னளிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், வவுனியாப் பல்கலைக்கழக வியாபாரக் கற்கைகள் பீடத்திடம் இந்த திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, பீடாதிபதி பேராசிரியர் வை.நந்தகோபன் தலைமையிலான விசேட நிபுணர் குழுவினரால் இந்தத் தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட விரிவான ஆய்வுகள் மற்றும் கலந்துரையாடல்களின் அடிப்படையில் மொத்தம் 431 சுற்றுலா மையங்கள் இந்த திட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டம்: 5 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு 200 மையங்கள், முல்லைத்தீவு மாவட்டம்: 77 மையங்கள், கிளிநொச்சி மாவட்டம்: 56 மையங்கள், வவுனியா மாவட்டம்: 49 மையங்கள், மன்னார் மாவட்டம்: 49 மையங்கள்.

இவற்றில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னுரிமை அடிப்படையில் தலா 10 சுற்றுலா மையங்களும், மாகாண மட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தலா 2 சுற்றுலா மையங்களுமாக மொத்தம் 10 மையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சுற்றுலா மையமும் தெரிவு செய்யப்பட்டதற்கான காரணம், அங்குள்ள சுற்றுலா வாய்ப்புகள், அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள், வடக்கின் சுற்றுலாவில் உள்ள பலம் மற்றும் பலவீனங்கள், பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் என அனைத்துத் தரவுகளும் இந்த மூலோபாயத் திட்ட நூலில் விரிவாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

திட்ட அறிக்கையைப் பெற்றுக் கொண்டு கருத்துத் தெரிவித்த ஆளுநர், “இந்தச் சிறந்த திட்டத்தை வெறும் ஆவணமாக மட்டும் வைத்திருக்காது, இதனைச் செயற்படுத்துவதற்கான நடைமுறைச் சாத்தியமான பொறிமுறையை உடனடியாக உருவாக்க வேண்டும்”என வலியுறுத்தினார்.

மேலும், முன்னுரிமைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு சுற்றுலா மையத்தையும் சுற்றுலாப் பணியக அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட அனைத்துப் பங்குதாரர்களுடனும் கலந்துரையாடி, அபிவிருத்திப் பணிகளை விரைவாக ஆரம்பிக்குமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மன்னார் மாவட்டச் செயலர், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்), உதவிப் பிரதம செயலாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர், 5 மாவட்டச் செயலகங்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர், பணிப்பாளர் மற்றும் உறுப்பினர்கள், வவுனியாப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ர விரிவுரையாளர்களான சி. சிவநேந்திரா பி. மதுசன் மற்றும் ருகுணு பல்கலைக்கழக கலாநிதி சம்பிக லியனகே உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.


















# மட்டக்களப்பு இந்துக் கல்லூரியின் 80 ஆவது ஆண்டு நிறைவு விழா

## நடைபவனி முன்னெடுப்பு

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்ட நடைபவனி இன்று வெகு விமர்சையாக நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் பகீரதன் தலைமையில் பாடசாலையிலிருந்து வாகனபேரணியுடன், இந்த நடைபவனி ஆரம்பமானது.

இந்த நடை பவனியில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன், மாநகரசபையின் ஆணையாளரும் பழைய மாணவருமான என். தனஞ்செயன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பாடசாலையின் ஸ்தாபகர் நல்லையாமாஸ்டரின் உருவப்படத்தினை சாரணிய மாணவர்கள் தாங்கிச்செல்ல நடைபவனியானது சிறப்பாக நடைபெற்றது.

இந்த நடை பவனியில் பாடசாலையின் மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மூன்று இனங்களையும் பிரதிபலிக்கும் வகையில் மாணவர்களின் கண்காட்சி பவனி உட்பட பல்வேறு வகையான ஊர்திகளை கொண்டதாக இந்த பவனி நடைபெற்றது.

ரயில் நிலைய வீதியூடாக அரசடி பல்கலைக்கழக சுற்றுவட்டத்தின் ஊடாக சென்று திருமலை ஊடாக தண்டவன் வெளி வரை சென்று மீண்டும் ரயில் நிலைய வீதியூடாக பேரணி பாடசாலையை வந்தடைந்தது.














# இத்தாலிய பாதுகாப்பு ஆலோசகருடன் இலங்கை கடற்படைத் தளபதி சந்திப்பு

இலங்கைக்கான இத்தாலிய பாதுகாப்பு ஆலோசகர் கேப்டன் அர்மாண்டோ பவ்லோ சிமி, இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனங்கொடவை உத்தியோகபூர்வமாக சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு கடந்த 05 ஆம் திகதி கடற்படைத் தலைமையகத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது , இருதரப்பு நலன்கள் குறித்த விடயங்கள் தொடர்பில் இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை நினைவு கூர்ந்தனர்.






# இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் வர்த்தக ஒப்பந்தம் சிறந்த செய்தி

## பிரதமர் மோடி வரவேற்பு



இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் குறித்த கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையில், இது இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் மிகச் சிறந்த செய்தி என்று பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஓர் இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்துக்கு நாங்கள் ஒப்புக் கொண்டுள்ளோம். இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான வலுவான உறவுகளுக்கு காரணமாக இருக்கும் ட்ரம்ப்பின் தனிப்பட்ட அர்ப்பணிப்புக்கு நான் நன்றி கூறுகிறேன்.

இந்த ஒப்பந்தம், நமது கூட்டாண்மையின் ஆழம், நம்பிக்கை மற்றும் துடிப்பை பிரதிபலிக்கிறது. இந்திய விவசாயிகள், தொழில்முனைவோர், சிறு, குறு, நடுத்தர தொழில்முனைவோர், ஸ்டார்ட்அப் கண்டுபிடிப்பாளர்கள், மீனவர்கள் உள்ளிட்டோருக்கு புதிய வாய்ப்புகளை திறப்பதன் மூலம், இந்த ஒப்பந்தம் இந்தியாவில் தயாரிப்போம் முயற்சிகளை வலுப்படுத்தும். இது பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கும்.

இந்தியாவும் அமெரிக்காவும் புதுமைகளை ஊக்குவிப்பதற்கான உறுதிப்பாட்டை பகிர்ந்து கொள்கின்றன. இந்த ஒப்பந்தம், நமக்கு இடையே முதலீடு மற்றும் தொழில்நுட்ப கூட்டாண்மைகளை மேலும் ஆழப்படுத்தும். மேலும், நெகிழ்ச்சியான, நம்பகமான விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்தும்.

அதோடு, உலகளாவிய வளர்ச்சிக்கு பங்களிக்கும். வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதை நோக்கி இந்தியா முன்னேறும்போது, அது நமது மக்களுக்கு அதிகாரத்தை அளிக்கும். மேலும், பகிரப்பட்ட செழிப்புக்கு பங்களிக்கும் உலகளாவிய கூட்டாண்மைகளை உருவாக்க நாங்கள் ஊறுதிபூண்டுள்ளோம்." என தெரிவித்துள்ளார்.

# எம்.என்.ராஜம், எஸ்.பி முத்துராமனுக்கு கலைத்துறை வித்தகர் விருது அறிவிப்பு



பழம்பெரும் நடிகை எம்.என்.ராஜம் மற்றும் இயக்குநர் எஸ்.பி. முத்துராமனுக்கு கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் திரையுலகில் சிறந்து விளங்கும் வாழ்நாள் சாதனையாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கடந்த 2022 இல் அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து 2022 இம் ஆண்டில் வசனகர்த்தா ஆரூர்தாஸுக்கும், 2023 இல் கவிஞர் மு.மேத்தாவுக்கும், கலைஞர் கருணாநிதி நூற்றாண்டையொட்டி பின்னணிப் பாடகி சுசீலாவுக்கும் இந்த விருது வழங்கப்பட்டது.

இந்நிலையில் 2024 ஆம் ஆண்டுக்கான கலைத்துறை வித்தகர் விருதுக்கு பழம்பெரும் நடிகை எம்.என். ராஜமும், 2025 ஆம் ஆண்டுக்கான விருதுக்கு திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமனும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் ரொக்கப் பரிசாக தலா 10 லட்சம் இந்திய ரூபாவும், நினைவுப் பரிசும் வழங்கப்படும். இதற்கான விருது வழங்கும் விழா முதல்வர் தலைமையில் விரைவில் நடைபெற உள்ளது.

# இந்தியா - மலேசியா இடையிலான பாதுகாப்பு உறவு மேம்படுத்தப்படும்

## பிரதமர் மோடி நம்பிக்கை



மலேசியாவுடன் பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்த இந்தியா விரும்புவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தென் கிழக்கு ஆசிய நாடான மலேசியாவுக்கு இரண்டு நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி இன்று புறப்பட்டுச் சென்றார். மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமின் அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வ பயணமாக பிரதமர் மோடி சென்றுள்ளார்.

மலேசியவுக்குப் புறப்படும் முன்பாக அவர் வெளியிட்ட சமூக ஊடக பதிவில்,

“இந்தியாவுடன் ஆழமான, விரிவான உறவுகளைக் கொண்ட நாடு மலேசியா. எனது நண்பர் பிரதமர் அன்வர் இப்ராஹிமின் அழைப்பின் பேரில், நான் மலேசியாவுக்கு பயணம் செய்கிறேன். இந்த பயணம் நமது விரிவான மூலோபாய பங்களிப்பை வலுப்படுத்துவதோடு, அனைத்துத் துறைகளிலும் ஒத்துழைப்பை மேம்படுத்தும்.

இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்தவர்களின் துடிப்பான தாயகமாக மலேசியா உள்ளது. கோலாலம்பூரில் இன்று நடைபெறும் சமூக நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். அங்கு, புலம்பெயர்ந்த மக்களுடன் உரையாட எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும்.” என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், “இந்தியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையேயான வரலாற்று உறவுகள் சமீப ஆண்டுகளில் உறுதியான முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. பிரதமர் அன்வர் இப்ராஹிமுடனான எனது பேச்சுவார்த்தைகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். நமது விரிவான மூலோபாய பங்களிப்பை நாம் மேலும் வலுப்படுத்துவோம்.

இரு நாடுகளின் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதோடு, பொருளாதாரம் மற்றும் புத்தாக்கத்தில் பங்களிப்பை மேம்படுத்தவும், நமது ஒத்துழைப்பை புதிய துறைகளுக்கு விரிவுபடுத்தவும் நாங்கள் இலக்கு நிர்ணயிப்போம்.” என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் இந்தியாவுக்கான வரி நீக்கம் இன்று முதல் அமுலாகும்



இந்தியாவிற்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த 25 சதவீத மேலதிக இறக்குமதி வரியை நீக்குவதற்கான நிறைவேற்று ஆணையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்றைய தினம் கையெழுத்திட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் எட்டப்பட்ட வர்த்தக உடன்படிக்கையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை குறித்து பிரதமர் நரேந்திர மோடியும் ஏற்கனவே உறுதிப்படுத்தியிருந்தார்.

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பிரதான முரண்பாடாக இருந்த ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிறுத்துவதற்கு இந்தியா உறுதியளித்துள்ளதாக ட்ரம்ப் தனது ஆணையில் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவிற்குப் பதிலாக அமெரிக்காவில் இருந்து எரிசக்தி தயாரிப்புகளை கொள்வனவு செய்ய இந்தியா இணங்கியுள்ளதாக அந்த ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த 10 ஆண்டுகளுக்கு பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான கட்டமைப்பொன்றிற்கும் இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தியாவின் இந்த நடவடிக்கைகள் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கையுடன் ஒத்துப்போவதால், 2022 ஆம் ஆண்டு ரஷ்யாவிற்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவுகளில் இருந்து இந்தியாவிற்கு விலக்கு அளிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த வரி நீக்க நடவடிக்கையானது இன்று சனிக்கிழமை முதல் அமுலுக்கு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை நிறுத்துவது தொடர்பாக பிரதமர் மோடி தனது உத்தியோகபூர்வமாகஎதுவும் தெரிவிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

# ஈரானுடன் வர்த்தகம் செய்தால் கூடுதலான வரி விதிக்கப்படும்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரானுடன் வர்த்தகத் தொடர்புகளைப் பேணும் நாடுகளுக்கு மேலதிக இறக்குமதி வரிகளை விதிப்பதற்கான நிறைவேற்று ஆணை ஒன்றில் கையெழுத்திட்டுள்ளார்.

ஈரானிடம் இருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருள்கள் மற்றும் சேவைகளைப் கொள்வனவு செய்யும் அல்லது வர்த்தகம் செய்யும் நாடுகளின் மீது அமெரிக்கா மேலதிக வரிகளை விதிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணையில் குறிப்பிட்ட வரி விகிதம் எதுவும் உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை. இருப்பினும், ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு உதாரணமாக 25 சதவீத வரி விதிக்கப்படலாம் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஈரானின் அணுசக்தித் திட்டம், பயங்கரவாதத்திற்கான ஆதரவு மற்றும் பிராந்திய ஸ்திரமின்மை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில், அந்த நாட்டின் வருமான வழிகளை முடக்குவதற்காக இந்த அதிகபட்ச அழுத்தம்" கொடுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வர்த்தகச் செயலாளர் மற்றும் இராஜாங்கச் செயலாளர் ஆகியோர் இணைந்து, எந்தெந்த நாடுகள் ஈரானுடன் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன என்பதைத் தீர்மானித்து, இந்த வரி விதிப்பு தொடர்பான பரிந்துரைகளை வழங்குவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை சீனா, இந்தியா மற்றும் துருக்கி போன்ற ஈரானின் முக்கிய வர்த்தகப் பங்காளிகளாக இருக்கும் நாடுகளுக்குப் பெரும் பொருளாதாரச் சவாலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சீன உளவாளிகள் பிரான்ஸில் கைது

பிரான்ஸின் தென்மேற்குப் பகுதியில் உள்ள கிராமப்புற வீடு ஒன்றிலிருந்து தகவல்களைத் திரட்டியதாகச் சந்தேகிக்கப்படும் சீன உளவாளிகள் இருவர் அந்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போர்டாக்ஸ் நகருக்கு அருகில் உள்ள காம்ப்ளேன்ஸ்-எட்-மேனாக் என்ற அமைதியான கிராமத்தில், வாடகைக்கு எடுக்கப்பட்ட வீட்டின் தோட்டத்தில் சீனர்கள் இருவர் பாரிய செயற்கைக்கோள் அண்டெனாவைப் பொருத்தியுள்ளனர்.

இதனை அவதானித்த அப்பகுதி மக்கள், அதேநேரம் தங்களது இணையச் சேவைகளிலும் இடையூறுகள் ஏற்பட்டதைக் கண்டு காவல்துறைக்குத் தகவல் வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை பிரான்ஸின் உள்நாட்டுப் பாதுகாப்புப் பொது இயக்குநரகத்தின் அதிகாரிகள் குறித்த வீட்டை முற்றுகையிட்டு சோதனையிட்டனர்.

இதன்போது அங்கிருந்த பெருமளவிலான கணினி உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதுடன், 27 மற்றும் 29 வயதுடைய இரு சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தற்போது பரிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு, பிரான்ஸின் நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வெளிநாட்டு சக்தியொன்றுக்குத் தகவல்களை வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இவர்கள் கடந்த மாதம் 'பொறியியலாளர்கள்' என்ற




போர்வையில் தொழில் வீசாவைப் பெற்று பிரான்சுக்குள் நுழைந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஈலோன் மஸ்க்கிற்குச் சொந்தமான 'ஸ்டார்லிங்க்' செயற்கைக்கோள் வலையமைப்பின் தரவுகள் மற்றும் பிரான்ஸின் முக்கிய இராணுவத் தளங்களின் தகவல்களைத் திரட்டி, அவற்றைச் சீனாவுக்கு அனுப்ப இவர்கள் முயற்சித்துள்ளனர் என அரச தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸின் தென்மேற்குப் பகுதியில் ஏர்பஸ் போன்ற முன்னணி விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழிற்சாலைகள் அமைந்துள்ளதால், இந்தப் பகுதி நீண்டகாலமாகவே வெளிநாட்டு உளவாளிகளின் இலக்காக இருந்து வருவதாகப் பாதுகாப்பு நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கனடா முரசு

சனிக்கிழமை | 07/02/2026

## கனடாவில் ஜனவரி மாதம் 25,000 வேலை இழப்புகள்

ஜனவரி மாதத்தில் கனடா பொருளாதாரம் 25,000 வேலை வாய்ப்புகளை இழந்துள்ளதாக கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், வேலை 02



# கிரீன்லாந்தில் கனடாவின் தூதரகம் திறப்பு: ட்ரம்ப்பின் மிரட்டலுக்கு நட்பு நாடுகள் பதிலடி

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கிரீன்லாந்தை அமெரிக்காவுடன் இணைப்பது தொடர்பாக விடுத்து வரும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், கனடா தனது முதலாவது இராஜதந்திர அலுவலகத்தை கிரீன்லாந்தின் தலைநகரான நூக்கில் நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்துள்ளது.**

**அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், கிரீன்லாந்தைக் கைப்பற்றுவது தேசிய பாதுகாப்புக்கு அவசியமானது எனக் கூறி வருவதுடன், அதற்கு இணங்காத நேட்டோ நட்பு நாடுகள் மற்றும் டென்மார்க் மீது வர்த்தக வரிகளை விதிப்பதாக அச்சுறுத்தி வருகிறார்.** 02

இந்தச் சூழலில் கனடா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கிரீன்லாந்திற்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் அங்கு புதிய தூதரகங்களைத் திறந்துள்ளன.

கனடாவின் ஆளுநர் நாயகம் மேரி சைமன் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் அனிதா ஆனந்த் ஆகியோர் இந்தத் திறப்பு விழாவில் பங்கேற்றுள்ளனர்.

கனடாவின் முதல் சுதேச இனத்தவர் ஆளுநர் நாயகம் மேரி சைமன், கனடா மற்றும் கிரீன்லாந்துக்கு இடையிலான கலாசார மற்றும் இன ரீதியான பிணைப்பை மீண்டும் 02

# நிகழ்ச்சி கலந்துகொண்டவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படும் அபாயம்



கனடாவில், பொது நிகழ்ச்சி ஒன்றில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட நிலையில், வைரஸ் தொற்று ஒன்றால் பாதிக்கப்பட்டவர்களும் அங்கிருந்தமை தெரிய வந்துள்ளதால் கவலை நிலை உருவாகியுள்ளது.

ஜனவரி மாதம் 20 ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை, கனடாவின் மனித்தோபா மாகாணத்திலுள்ள பிராண்டன் நகரில் விவசாயம் தொடர்பிலான கண்காட்சி ஒன்று நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டார்கள். 03




## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடுபவர்களின் எண்ணிக்கை குறைந்ததன் காரணமாக, வேலைவாய்ப்பில்லா விகிதம் 6.8 சதவீதத்திலிருந்து 6.5 சதவீதமாக குறைந்துள்ளது.

ஜனவரியில் ஏற்பட்ட வேலை இழப்புகள் பெரும்பாலும் தனியார் துறையிலும், பகுதி நேர வேலைகளிலும் பதிவாகியுள்ளன.

குறிப்பாக 25 முதல் 54 வயதுக்குட்பட்ட பெண்களிடையே இந்த இழப்புகள் அதிகமாக இருந்ததாக கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் வேலை இழப்புகளின் மிகப்பெரிய தாக்கத்தை ஒன்டாரியோ மாகாணம் சந்தித்துள்ளது. குறிப்பாக உற்பத்தித் துறையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.

ஜனவரியில் மட்டும் உற்பத்தித் துறை 28,000 வேலைகளை இழந்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுகையில், அமெரிக்க வரித் தடைகள் துறையை பாதிப்பதற்கு முன்பே, இந்த துறையில் மொத்தமாக சுமார் 51,000 வேலைகள் குறைந்துள்ளன.

இதனுடன், கல்வித் துறை மற்றும் அறிவியல், தொழில்நுட்ப சேவைத் துறைகளிலும் வேலை இழப்புகள் பதிவாகின.

ஆனால் தகவல், கலாசாரம், பொழுதுபோக்கு துறைகளிலும், வணிகம், கட்டிடம் மற்றும் பிற ஆதரவு சேவைத் துறைகளிலும் ஏற்பட்ட வேலை உயர்வுகள், சில அளவுக்கு இழப்புகளை சமநிலைப்படுத்தின.

ஜனவரியில் சராசரி மணிநேர ஊதியம் வருடாந்த அடிப்படையில் 3.3 சதவீதம் உயர்ந்துள்ளது. இது டிசம்பர் மாதத்தை விட சற்றுக் குறைவான உயர்வாகும்.

இந்த ஜனவரி தொழிலாளர் சந்தை கணக்கெடுப்பு, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குப் பிறகு பதிவான முதல் மொத்த வேலை இழப்பாகும்.





## கிரீன்லாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தியுள்ளார்.

கனடிய கடலோர காவற்படை கப்பல் ஒன்றுடன் அதிகாரிகள் குழு நூக் நகருக்குச் சென்றுள்ளது. இது கிரீன்லாந்தின் இறையாண்மைக்குக் கனடா வழங்கும் ஆதரவின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

டொனால்ட் ட்ரம்ப், ரஷ்யா மற்றும் சீனாவின் அச்சுறுத்தல்களிலிருந்து கிரீன்லாந்தைப் பாதுகாக்க டென்மார்க் தவறிவிட்டதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேபோன்ற விமர்சனங்களை அவர் கனடாவின் ஆர்க்டிக் பிராந்தியம் குறித் தும் முன்வைத்துள்ளார்.

ஆர்க்டிக் பிராந்தியத்தின் உள்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பிற்காக கனடா 1 பில்லியன் டொலர் நிதியை ஒதுக்கியுள்ளது.

மேலும் ஆர்க்டிக் பகுதியில் ஆண்டு முழுவதும் இராணுவப் பிரசன்னத்தை உறுதி செய்யப் பிரதமர் மார்க் கார்னியின் அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இதுவரை ஐஸ்லாந்து மற்றும் அமெரிக்கா மட்டுமே கிரீன்லாந்தில் தூதரகங்களைக் கொண்டிருந்தன.

நேற்று கனடாவுடன் இணைந்து பிரான்ஸும் தனது புதிய தூதரகத்தைத் திறந்துள்ளமை, நேட்டோ நட்பு நாடுகள் கிரீன்லாந்தின் இறையாண்மைக்கு வழங்கும் ஆதரவை உறுதிப்படுத்துவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# விபத்தை ஏற்படுத்திய இந்தியருக்கு கனடாவில் வசிக்க அனுமதியில்லை

கனடாவில் விபத்தை ஏற்படுத்திய இந்தியர் ஒருவர் அகதியாக கனடாவில் தங்கியிருக்க முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி, கனடாவின் Saskatchewan பகுதியில், சித்து என்ற இந்தியர் செலுத்திய ட்ரக், பஸ் ஒன்றின் மீது பயங்கரமாக மோதியது.

அந்த பஸ்ஸில் Broncos ஜூனியர் ஹாக்கி அணியைச் சேர்ந்த இளைஞர்கள் பயணம் செய்துகொண்டிருந்தனர். அந்த கோர விபத்தில் 16 பேர் கொல்லப்பட்டனர். 13 பேர் படுகாயமடைந்தனர்.

ஆகவே, அந்த இந்தியருக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தான் பயணிக்கும் வீதிக்கு குறுக்கே மற்றொரு வீதி குறுக்கிடுவதாக அறிவிப்பு பலகைகளும், மின்னும் விளக்குகளுடன் சிக்னல்களும் இருந்தும், தான் பிரேக் பிடிக்கவில்லை என ஒப்புக்கொண்ட சித்து, தண்டனையையும் ஏற்றுக்கொண்டார்.

அவர் கனடாவில் நிரந்தர வாழிட உரிமம் பெற்றவர். பெடரல் சட்டத்தின் படி, நிரந்தர வாழிட உரிமம் பெற்ற ஒருவர் குற்றச்செயல் ஒன்றில் ஈடுபட்டு குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றால், தண்டனைக்காலத்திற்குப் பின் அவர் நாடு கடத்தப்படலாம்.



இந்நிலையில், பல்வேறு மருத்துவப் பிரச்சினைகள் கொண்ட ஒரு குழந்தை சித்துவுக்கு இருப்பதால், மனிதநேய அடிப்படையில் தன்னை கனடாவில் வாழ அனுமதிக்குமாறு கோரிக்கை முன்வைத்திருந்தார் சித்து.

ஆனால், அவரது கோரிக்கையை ஏற்க கனடா புலம்பெயர்தல் மற்றும் அகதிகள் ஆணையம் மறுத்துவிட்டதாக சித்துவின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

ஆகவே, சித்து விரைவில் இந்தியாவுக்கு நாடுகடத்தப்படலாம் என்றும் அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

## நிகழ்ச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்கள், இந்த மாதம், அதாவது, பிப்ரவரி மாதம் 13ஆம் திகதி வரை, தங்களுக்கு மண்ணன் அல்லது மனல்வாரி அல்லது தட்டம்மை என்னும் measles என்னும் வைரஸ் தொற்றின் அறிகுறிகள் தோன்றுகின்றனவா என்பதை கவனித்துக் கொள்ளுமாறு சுகாதாரத்துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மனித்தோபா மாகாணத்தில் ஜனவரி மாதத்தில் மட்டும் 74 பேருக்கு தட்டம்மை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிலர் தங்களுக்கு பாதிப்பு இருப்பது தெரியாமலே பிராண்டன் நகரில் நடைபெற்ற அந்த விவசாய கண்காட்சியில் கலந்துகொண்டிருக்கலாம் என கருதப்படுவதாலேயே சுகாதாரத்துறை அதிகாரிகள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.